சுருக்கம்

பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு மு.மணிமாறன், த/பெ. காலஞ்சென்ற திரு. கு.முருகன் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித்(பி1) துறை

அரசாணை (3ப) எண்.5

நாள் : 06.06.2022
சுபகிருது, வைகாசி - 23,
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் கடிதம் எண். நி3(3)/012496/2021, நாள் 18.10.2021 மற்றும் 26.04.2022.

-----

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கீழ்பெண்ணையாறு வடிநில உபகோட்டம், திருக்கோவிலூரில் உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு கு.முருகன் கடந்த 09.05.2015 அன்று காலமானதையடுத்து அவரது மகன் திரு மு.மணிமாறன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் விழுப்புரம், பொதுப்பணித்துறை, மின்கோட்ட அலுவலகத்தில் 20.03.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் பிறந்த தேதி 05.01.1999, 10-ஆம் வகுப்பில் (CBSE Pattern) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்கான சான்றுகள்/ சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 20.03.2020 முற்பகல் முதல் பணி வரன்முறைப்படுத்த அரசாணைப் பெற்றுத் தருமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும், திரு மு.மணிமாறன், இளநிலை உதவியாளர் அவர்கள் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 20.03.2020 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணி வரன்முறை செய்வதால் தனியர் ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண். 8235/ட்டி.1/2022, நாள் 06.05.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா.எண். 2393275/ஜி.1/2022, நாள்27.05.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை - 5.
திரு மு.மணிமாறன், இளநிலை உதவியாளர்.
(முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5 வழியாக)

நகல்

மாநில கணக்காயர், சென்னை -18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை- 9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்